**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 2 December 2020

# அரசாங்க சேவை ஆணையத்தில் பேராசிரியர் ஓங்

கொவிட்-19 தடுப்பூசி உத்திகள் தொடர்பான குழுவில் தலைவராக உள்ள இணைப் பேராசிரியர் பெஞ்சமின் ஓங், அதிபர் ஹலிமா யாக்கோப்பால் அரசாங்க சேவை ஆணைய உறுப்பினராக நியமிக்கப்பட்டார். 63 வயது பேராசிரியர் ஓங், சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தில் மூத்த துணைத் தலைவராகவும் தேசிய பல்கலைக்கழக மருத்துவ மனையில் மூத்த ஆலோசகராகவும் இருக்கிறார். சுகாதார அமைச்சு நியமித்துள்ள நிபுணர் குழுவின் தலைவர் இவர். இக்குழு கொவிட்-19 தடுப்பூசி உத்திகள் குறித்து பரிந்துரைத்து வருகிறது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.